[Sri M. A. Manickavelu] [13th November 1957

வரக்கூடாது. தமிழ் மொழியை வளர்ப்பதற்கு எத்தனையோ துறைகள் இருக்கின்றன. இந்தத் துறையில் தமிழை வளர்ப்பதாக எண்ணிக் கொண்டு இந்த மாறுதலை செய்யவேண்டிய அவசியம் இல்லை. பாக்கி வழிகளில் அதை முன்னுக்குக் கொண்டுவருவோம் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

" That the Madras Money-lenders Bill, 1957, as amended be passed. "

The motion was put and carried and the Bill as amended was passed.

(2) THE MADRAS BHOODAN YAGNA BILL, 1957 (L.A. BILL NO. 15 OF 1957).

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

" That the concurrence of the Legislative Council is obtained in setting up a Joint Select Committee of both the houses consisting of 24 Members (16 Members from the Assembly and 8 Members from the Council) to consider the Madras Bhoodan Yagna Bill, 1957, L.A. Bill No. 15 of 1957 and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri M. Bhaktavatsalam
Sri P. G. Karuthiruman.
Srimathi Dr. T. S. Soundaram Ramachandran.
Sri A. Vedarathnam Pillai.
,, A. Senapathi Gounder.
,, S. Lazar.
,, M. P. Periasami.
,, M. William.
,, R. Krishnasami Naidu.
,, T. Manavalan.
,, M. G. Sankar.
,, V. K. Kothandaraman.
,, P. S. Chinnadurai.
,, P. Veerappa Kounder.
,, D. S. Authimoolam.
,, M. Karunanithi."

The House is aware of the Bhoodan Yagna Movement initiated by Sri Acharya Vinobha Bhave which is slowly bringing about a silent, bloodless revolution with far-reaching and salutary economic and social consequences. The main object of the movement is to obtain excess lands from the " have's " and to distribute them, without any distinction of caste or creed, to the " have not's " or to those who do not possess sufficient land for

13th November 1957] [Sri M. Bhaktavatsalam]

cultivation. Another object of the Movement is to instil the dignity of labour into members of the society. In order to facilitate the donation of lands to the Bhoodan Yagna Movement and to simplify the legal formalities necessary for the transfer of such lands, the Government in August 1955, introduced a Bill in the last Assembly. At the wish of the members of the then House, the Bill was referred to a Select Committee of the House. Before the Select Committee could complete its work the Assembly was dissolved. Therefore the Bill is introduced again. Before doing so the Government have considered the various amendments moved by M.L.As. of the former Assembly and suggestions made by the Akhil Bharat Sarva Seva Sangh and have suitably revised the Bill wherever necessary. Several State Legislatures in India have already passed similar legislation.

I shall now briefly explain the main provisions of the Bill indicating the main changes. Clause 3 of the Bill enables the State Government to constitute a State Bhoodan Yagna Board. The "Committee" of the previous Bill has been renamed as "Board" on the suggestion of the Akhil Bharat Sarva Seva Sangh. Under clause 4, the Chairman of the Board shall be nominated by Acharya Vinobha Bhave, subject to the approval of the State Government; four or more but not exceeding seven members of the Committee shall also be nominated by Vinobhaji, subject to the approval of Government and four or more but not exceeding seven members shall be appointed by the State Government. There is also a saving provision in this clause which enables the State Government, in case of necessity, to appoint all the members including the Chairman. Under clause 5, the term of office of all the members will be four years and they will be eligible for renomination or reappointment. Clause 6 specifies the disqualifications for membership. Clause 7 lays down the procedure for the resignation of their respective offices by the Chairman or members. Clause 8 states the grounds on which the Chairman or a member may be removed from the office and Clause 9 contains provisions for filling up vacancies of Chairman and members. Clause 10 empowers the Government to dissolve the State Board, if it fails, without reasonable cause, to perform its duties or if circumstances arise which render the Board unable to discharge its duties, or if for any other reason the Government consider it expedient to dissolve the Board. The dissolution will, however, be ordered only after giving the Board a reasonable opportunity to show cause against such a step.

Under clause 11, all lands donated will vest in the State Board and will be free from liability to any attachment or sale in execution of any decree or order passed by a civil court against the Board. Clause 12 provides for the appointment by the Board of any of its members as its Secretary and for the appointment of such other staff as may be found necessary. Provision is also made for the delegation by the Board, subject to State Government's approval, of any of its powers and duties to the Secretary. Clause 13 regulates the conduct of meetings of the Committee. Clause 14 states

[Sri M. Bhaktavatsalam] [13th November 1957

that the acts of the State Board shall not be invalidated on technical grounds. Clause 15 provides for the constitution of local committees for a district or a portion of a district, consisting of not more than three members, all to be appointed by the State Board subject to the approval of the State Government. The State Board may authorise a local committee to exercise all or any of its powers and duties except those which may be specified by the State Government and the local Committee shall exercise the same, subject to control and revision by the Government.

Clause 16 specifies the persons who are competent to donate lands under the scheme and the manner in which the declaration in that behalf shall be made. This clause has been redrafted to provide for the donation of land assigned to political sufferers and donation of land by Janmi and other landholders in the areas where the Malabar Tenancy Act is in force. Clause 17 regulates the manner in which objections to the donation shall be filed and inquired into. The objections shall be heard by the Tahsildar or Deputy Tahsildar who will, by order, either confirm the donation or declare it null and void. No appeal or revision lies to any superior authority against the order passed by the Tahsildar or Deputy Tahsildar, but under Clause 23, the aggrieved party may, within six months, file a suit in the civil court having jurisdiction, to set aside that order and the decision of the court, shall be binding on the State Board.

Clause 18 provides for the subdivision of the land donated to Bhoodan if it forms part of a holding. Clause 19 provides for the grant by the State Board of any lands which vest in it, to landless persons, able and willing, to cultivate them or to local authorities for community purposes. The proviso to clause 19 (1) prohibits the grant of land to political sufferers who have donated land under clause 16. Clause 20 seeks to validate the donation of lands made to the Bhoodan Movement prior to the commencement of the Act and the grant of such lands to individuals in pursuance of that movement.

Clause 21 enables the State Board to have its own funds and to accept grants, loans, etc., from the Central Government or the State Government or any other authorities or persons. Clause 24 exempts every declaration and every grant of land from stamp duty and registration fee and the fee payable for the attestation of power-of-attorney. Clause 25 empowers the Government to make rules to carry out the purposes of the Act.

Sir, I have now briefly indicated the main purposes and features of the Bill. I commend the motion for the acceptance of the House.

Mr. SPEAKER : The motion is—

"That the concurrence of the Legislative Council be obtained in setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 members (16 members from the Assembly and 8 members

13th November 1957] [Mr. Speaker]

from the Council) to consider the Madras Bhoodan Yagna Bill, 1957 (L.A. Bill No. 15 of 1957) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee.' :—

The Hon. Sri M. Bhaktavatsalam.
Sri P. G. Karuthiruman.
Srimathi Dr. T. S. Soundaram Ramachandran.
Sri A. Vedaratnam.
,, A. Senapathi Gounder.
,, S. Lazar.
,, M. P. Periasami.
,, M. William.
,, R. Krishnasami Naidu.
,, T. Manavalan.
,, M. G. Sankar.
,, V. K. Kothandaraman.
,, P. S. Chinnadurai.
,, P. Veerappa Kounder.
,, D. S. Athimoolam.
,, M. Karunanithi."

The hon. Member Sri N. K. Palanisami has given notice to an amendment. He may move the amendment.

Sri N. K. Palanisami : Mr. Speaker, Sir, I move the amendment, namely—

'That the Madras Bhoodan Yagna Bill, 1957 (L.A. Bill No. 15 of 1957) be circulated for the purpose of eliciting public opinion.'

Sri K. Ramachandran : I second the amendment, Sir.

Mr. Speaker : Amendment moved :

'That the Madras Bhoodan Yagna Bill, 1957 (L.A. Bill No. 15 of 1957) be circulated for the purpose of eliciting public opinion.'

Before we take up the motion and amendment for discussion I should like to know the views of the House. In view of the fact that the matter is going up before the Joint Select Committee and the House will have another opportunity to discuss the Bill and the the report of the Joint Select Committee at great length, I think 45 minutes will be enough for the discussion on this motion to refer the Bill to a Joint Select Committee. If we complete the Bill to-day we can take up the other Bills to-morrow. My own feeling is that since the Bill after examination by the Joint Select Committee will be coming up before the House again, we can

complete the discussion within 45 minutes. I will give five minutes to each hon. Member who wants to take part in the discussion and call upon the Hon. Minister to reply at 1-25 p.m. I hope the House agrees with my suggestion. (Hon. Members : Yes.)

Now, the hon. Member Sri N. K. Palanisami may speak on his amendment.

Sri N. K. PALANISAMI : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் சொல்லக்கூடிய காலத்தில் இந்த மசோதாவானது முன்னால் பொறுக்குக் கமிட்டிக்கு போய் இருக்கிறது, பரிசீலனை செய்தார்கள், சாட்சியம் சொன்னார்கள் என்று சொன்னார்கள். அவர் சொன்னதுபோல் பொறுக்குக் கமிட்டியில் பரிசீலனை செய்யப்பட்டும்கூட இவ்வளவு குறைபாடுகள் இருக்கின்றன. இந்த மசோதாவானது போர்ட் மூலமாக சரியானபடி பரிசீலிக்கப்பட்டு நிவாரணம் அளிப்பதனால் இதை நான் ஆதரிக்கிறேன். இதை எங்கள் கொள்கை அடிப்படையில் எடுத்துக்கொண்டு பார்த்தால் எங்களுடைய கொள்கை பிரகாரம் இது ஒத்துக்கொள்வதல்ல. வெண்ணெயை கொக்கின் தலையின்மீது வைப்பதுபோல் இருக்கிறது. எங்கள் கொள்கையை நாங்கள் சொல்லுகிறோம். இந்த பூமிதான இயக்கத்தில் 5 கோடி ஏக்கர் நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு கோடி பூமிதான் நல்ல நிலமாக இருக்கிறது. மற்ற நான்கு கோடி நிலமும் வெறும் தரிசாக இருக்கிறது. ராமனாதபுரத்தில் அளிக்கப்பட்டிருக்கிற நிலத்தில் வெறும் புல், பூண்டுகூட முளைக்காத பல ஏக்கர் பூமிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் ஸ்ரீ கருத்திருமன் அவர்கள் சொன்னார்கள் ஸ்ரீ வினோபாஜி அங்கு வரக்கூடிய காலத்தில் மலைப்பிரதேசத்தில் இருக்கக்கூடிய புல் பூண்டு முளைக்காத நிலங்களை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். இவ்விதமாக தானமாக கொடுத்தவர்கள் நல்ல பூமியை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏன் நல்ல முறையில் பிரித்துக்கொடுக்கவில்லை என்று சொல்ல விரும்புகிறேன். இப்போது பூமியை கிரமமாக கட்டுப்பாடாக பிரித்துக்கொடுப்பதற்கு இங்கு கமிட்டி பார்த்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலத்தை குத்தகைக்கு விடுவதற்கு லோகல் கமிட்டிக்கு என்ன அதிகாரம் இருக்கிறது ? ஸ்டேட் போர்ட்டுக்கு ஏன் இந்த நியமனம் கொடுக்கவில்லை. ஜனங்களுக்கு ஸ்டேட் போர்ட் ரிப்போர்ட்டை எல்லாம் சர்க்கார் தெரியப்படுத்தவேண்டும்.

பல பூமிகள் தரிசாக இருக்கின்றன. இந்த பூமிகளை எல்லாம் உழுது பயிரிடுவதற்கு டிராக்டர்கள் முதலியவைகள் வேண்டும். சரியான முறையில் நிலத்தை பண்படுத்துவதற்கு வேண்டிய வசதிகள் செய்துகொடுக்க வேண்டியது அவசியம். பூமிதானமாக கொடுக்கப்பட்ட நிலங்களில் பல இடங்களில் தக்காவிக் கடன் கொடுக்கவில்லை. 1953-ம் வருஷத்திலே பூமிதானமாகக் கொடுக்கப்பட்ட நிலங்களுக்குக்கூட தக்காவிக் கடன் கொடுக்கப்படவில்லை. 1953-ம் வருஷத்திலே ஆயிரம் ஏக்கர் பூமிதானமாகக் கொடுக்கப்பட்டது.

நல்ல முறையிலே குத்தகைக்கு விடுவதற்கும், நிலத்தைப் பயன்படுத்துவதற்கும், நல்ல முறையிலே வினியோகிப்பதற்கும் வகை செய்யவேண்டும். முக்கியமாக ஏழை விவசாயிகளுக்கும், ஹரிஜனங்களுக்கும் அவசியம் முதலிலே வினியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும். 10 ஏக்கர் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை மாறி இப்பொழுது 5 ஏக்கர் நிலம் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஒன்றும் பதில் சொல்லவில்லை. இதையெல்லாம் மனதில் கொண்டு இந்த மசோதாவை பொதுஜன அபிப்பிராயத்திற்கு விடவேண்டும் என்று சொல்லி இந்தத் திருத்தத்தைக் கொடுக்கிறேன்.

13th November 1957]

Sri G. GOMATHI SANKARA DIKSHITAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது இந்தச் சட்டசபையில் கொண்டுவரக் கூடிய கிராம பூமிதான மசோதாவானது ஒரு சிறந்த சாதனையாக இருக்கிறது என்று தலைவர் அவர்களே அறிவார்கள். நம் நாட்டிலே நிலச்சீர்த்திருத்தம் எவ்வளவு அமைதியான முறையில், மற்ற நாடுகள் காணாத முறையிலே மகாத்மா காந்தியின் சீடர் ஸ்ரீ விநோபாஜி அவர்களால், நிலம் இல்லாத ஏழைகள் கஷ்டப்பட்டுத் தவிக்காமல் உழுது பயிரிட்டு வாழ்வதற்கு, நிலத்தை பரிசீலனைசெய்து சாத்வீகமான முறையில் சில ஏழை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு சர்க்கார் முன் வந்திருக்கிறது. அதனால்தான் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்த பூமிதான இயக்கத்தை சட்டமாக கொண்டுவந்ததைப்பற்றி நாங்கள் போற்றுகின்றோம்.

நிலம் தானம் செய்தவர்கள், உபயோகம் இல்லாத நிலங்களைக் கொடுத்தாலும்சரி, உபயோகம் உள்ள நிலங்களை கொடுத்தாலும் சரி, அவைகளை நன்கு பண்படுத்தி, அவைகள் உபயோகப்படும்படியாக, அவைகள் மூலம் பலன் ஏற்படும்படிச் செய்ய அரசாங்கம் அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளுமென்பதில் எனக்கு சந்தேகமில்லை. நாம் தனி உடைமையை நீக்க பாடுபடும்போது, சமுதாயத்திற்கே நிலம், உழுபவனுக்கே நிலம் என்ற தத்துவத்தை நம் காங்கிரஸ் அரசாங்கம் இன்று சட்ட மூலம் செய்கிறது என்றால் அது ஒரு பெரிய சிறந்த சாதனை என்பதை அரசியல் அபிப்பிராய பேதம் உள்ளவர்களும் இதை ஒத்துக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆச்சாரிய விநோபாஜி கேரளத்திற்கு விஜயம் செய்தபோது கேரள அரசாங்கத்தின் பிரதம மந்திரி பூதான யாத்திரயின்போது ஆச்சாரியா விநோபாஜியோடு, அவர்களுக்கு பூர்ண ஒத்துழைப்பு அளித்தார்கள். விநோபாஜியின் பூமிதான இயக்கத்தின் கருத்துக்களோடு அவர்கள் எவ்வளவு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள், எவ்வளவு ஆமோதிக்கிறார்கள் என்பதை நாம் கண்டு வருகிறோம். ஆகவே, இந்த பூமிதான இயக்கச் சட்டம் நம் ராஜ்யத்திற்கு மிகவும் அவசியமானதாகும். நல்ல சந்தர்ப்பத்தில் இந்தச் சட்டம் கொண்டு வந்ததைப்பற்றி நான் அரசாங்கத்தை பாராட்டுகிறேன். ஆனால் மிகவும் சிரத்தையாக கிராமங்கள்தோறும் நிலத்தை பங்கிடுசெய்ய, நிலம் இல்லாது தவிக்கும் விவசாயிகளுக்கு, ஏழைகளுக்கு பங்கிட்டுக் கொடுப்பதுடன், அந்நிலங்களை நன்கு பண்படுத்தி விவசாயம் செய்வதற்கு வேண்டிய எல்லாவித வசதிகளையும் அரசாங்கம் கவனித்து அவைகளைச் செய்யும் என்று நான் நம்புகிறேன். இந்த பூமிதானயக்ஞ பில்லை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri V. SUBBIAH:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் இந்த பில்லை வரவேற்கும் முறையில் நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த பில்லானது சில வருஷங்களுக்குமுன் வரவேண்டிய பில்லாகும். மற்ற மாகாணங்களில் இன்றைய தினம், பீஹார், ஒரிஸா, ஆஸாம், பின் பக்கத்தில் உள்ள மாகாணங்களாகிய ஆந்திரா, மைசூர், கேரளம் போன்ற மாகாணங்களில் முன்பே இந்த பில் வந்தாகிவிட்டது. நம் மாகாணத்தில் இதுவரையிலே இந்த பில் வராமல் இருந்ததற்காக அரசாங்கத்தை நான் குறைகூற கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக வருந்தவேண்டியிருக்கிறது. நம் அரசியலிற்கு எல்லாம் அப்பாற்பட்டதாகும் இன்று இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற பில். விநோபாஜி தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது பல ஜில்லாக்களிலும் அவரோடு இருந்தவன் என்பதாலும் ஒரு தாலுகா பூதான கமிட்டியின் கன்வீனர் என்ற முறையிலும் நான் சொல்கிறேன், இன்று ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விநியோகம் செய்யமுடியாத நிலையில் இருக்கிறோம். தற்போதைய நிலை என்னவென்றால், பூதான நிலங்களை விநியோகம் செய்வதில் ரெவன்யூ அதிகாரிகள் பூதான நிர்வாகிகளோடு ஒத்துழைக்க மறுக்கிறார்கள். சட்டபூர்வமாக நிலத்தை சப்-டிவிஷன் செய்து, பட்டா மாற்றிக் கொடுப்பதில்

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[Sri V. Subbiah] [13th November 1957

உள்ள கஷ்டத்தை அவர்களும் உணர்கிறார்கள், மக்களும் உணர்கிறார்கள். அந்த நிலையில் முன்பே வந்திருக்கவேண்டிய இந்த பில், இப்போதாவது வந்ததே என்று நான் சந்தோஷப்படுகிறேன். அதை உடனடியாக அமுல் நடத்தவேண்டும். மதிப்பிற்குரிய எனது நண்பர் பழனிஸ்வாமி அவர்கள் இந்த பில்லை, தமிழ் நாட்டு மக்களின் ஆதரவைத்தேட வேண்டுமென்ற நிலையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு அவசியமே இல்லை. தமிழ் நாடு மட்டுமல்ல. பாரதம் பூராவுமே விநோபாஜியினுடைய இயக்கத்தின் தன்மையை அறிந்திருக்கிறார்கள். அவர்கள் வேறு ஒன்று சொன்னார்கள், கல், மேடுபோன்ற நிலங்களைத்தான் தானமாக கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது சரியல்ல. ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்கள் எங்கள் தாலுகாவில் வாங்கியிருக்கிறோம். எட்டையாபுரம் ஜமீன்தார் அவர்கள் 250 எக்கர் நிலங்களை பூதானமாகக் கொடுத்திருக்கிறார்கள். பில் இல்லாத காரணத்தால்தான் அவைகள் இன்று விநியோகிக்கப்படாமல் இருக்கின்றன. அந்தப் பகுதியில் உள்ள மக்கள் விரும்பியே, தங்கள் கிராமத்தில் உள்ள ஏழை மக்களுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்ற தாராள மனப்பான்மையோடுதான், அந்த நல்ல நோக்கத்துடன்தான் அவர்கள் பூமிதான பத்திரத்தில் கையெழுத்திட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த சர்வே நம்பர்களைக்கூட கொடுத்திருக்கிறார்கள். அப்படி கொடுக்கப்பட்ட நிலங்களில் உபயோகமற்ற நிலங்கள் இருந்தாலும், அவைகளில் பெரும்பகுதியும் நல்ல நிலங்கள்தான் என்று நான் எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். இந்த பில் வெகு தெளிவாக இருக்கவேண்டும். பூமிதான பத்திரத்தில் கையெழுத்திட்டவுடனே அவைகளை விநியோகிக்க அரசாங்கத்தின் பூர்ண உதவி இவர்களுக்கு இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். விநோபாஜி அவர்கள், ஹரிஜனங்களுக்கும், நிலம் இல்லாத ஏழைகளுக்கும், உழைப்பாளிகளுக்கும், அதைப்பெற தகுதியுள்ளவர்களுக்குந்தான் நிலத்தைக் கொடுக்கவேண்டுமென்று அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். பூமிதான இயக்க ஊழியர்களாகிய நாங்கள் ஆயிரக்கணக்கான எக்கர் நிலங்களை பகிர்ந்து கொடுத்திருக்கிறோம். இன்னும் கொடுக்க வேண்டியதை, இந்த பில் வந்ததற்கப்புறம் கொடுக்க நாங்கள், தமிழ்நாட்டில் உள்ள பூதான ஊழியர்கள் தயாராகயிருக்கிறோம். ஆகவே, உடனடியாக, இந்த பில்லை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பாது, காலதாமதம் செய்யாது, உடனடி இந்த பில்லை சட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று அமைச்சரவையை கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இந்த மசோதா இரண்டு சபைகளுடையவும் பொறுக்குக் கமிட்டிக்கு விடப்படவேண்டும் என்பதுதான் இப்போது பிரேரேபிக்கப்பட்ட பிரேரேபணை. அதை பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு விட்டுவைக்கவேண்டும் கொஞ்சகாலத்திற்கு என்பதுதான் கனம் அங்கத்தினர் பழனிசுவாமி அவர்கள் கொண்டுவந்துள்ள திருத்தப் பிரேரணை. இந்த மசோதாமீது கடைசியில் பேசிய அங்கத்தினர் சுப்பையா நாயக்கர் அவர்கள் சொன்னார்களே, அது உண்மைதான். இந்த மசோதா வருவதற்கு ரொம்பவும் காலதாமதமாகிவிட்டது. ஆனால் அதற்குள்ள காரணங்களை நான் குறிப்பிட்டேன். இரண்டு வருஷங்களுக்கு முன்பே இந்த மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கவேண்டும். மசோதா அப்பொழுதே தயாரிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அதில் சில மாறுதல்கள் செய்யவேண்டுமென்று அதில் சம்பந்தபட்டவர்கள் கூறினார்கள். அதையெல்லாம் கவனித்து மசோதா அப்போதைய சட்டசபைக்கு வந்து செலக்ட் கமிட்டிக்கும் வந்திருந்தது. ஆனால் அதற்குள்ளே சட்டசபை கலைக்கப்பட்டுவிட்டது. இதில் அக்கரை உள்ளவர்களும், இதில் சம்பந்தப்பட்டவர்களும் இதில் பல மாறுதல்கள் செய்யவேண்டுமென்று கூறினார்கள். அதுவுமில்லாமல், வெறும் பூதானமாகயில்லாமல் கிராம தானமாக கிராமங்களில் உள்ள நிலம் பூராவும் தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் பரிசிலனை செய்து அதற்குரிய வகையில் இந்த சட்டத்தை மாற்றியமைக்கவேண்டியிருந்தது. இதுபற்றியெல்லாம் யோசனைகள் செய்து, இதைச் சரிவர அமைப்பதுபோன்ற வகைகளினால்தான் இவ்வளவு காலதாமத

13th November 1957] [Sri M. Bhaktavatsalam]

மாயிற்று. இதுபற்றி செலக்ட் கமிட்டியில், ஜாயின்ட் செலக்ட் கமிட்டியில் பரிசீலனை செய்யும்போது அப்போது கொடுக்கப்படும் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு திருத்தங்கள் ஏதாவது வேண்டுமானால் செய்யலாம். இதை பொதுமக்களின் அபிப்பிராயத்திற்கு விடவேண்டுமென்றும், செலக்ட் கமிட்டிக்குக்கூட விடவேண்டாம் என்றும் கனம் அங்கத்தினர் பழனிஸ்வாமி அவர்கள் சொல்வதற்கு இதில் கொஞ்சம்கூட இடமில்லை. அதை நான் எதிர்க்கிறேன். அவர்கள் அவ்வாறு இந்த மசோதாவைப்பற்றிக் கூட சொல்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. எப்போதும் ஒரே ரீதியில்தான், அரசாங்கம் கொண்டுவரும் எந்த மசோதாவையும், எந்தத் தீர்மானத்தையும்பற்றி ஒரே ரீதியில் பேசுவதுதான் அவர்களது வழக்கம். அது அவர்களின் வழக்கமாய் போய்விட்டது. அதைக் கேட்பதும் நம் வழக்கமாகிப் போய்விட்டது. தானம் கொடுத்த மாட்டின் பல்லைப் பிடுங்கிப் பார்ப்பார்களா என்று ஒரு பழமொழி உண்டு. அதுமாதிரி, தானமாக கிடைத்திருக்கும் நிலம் நல்ல நிலமாயிருக்கலாம், கெட்ட நிலமாயிருக்கலாம். சிலரிடம் கெட்ட நிலந்தான் இருந்திருக்கும். அவர்கள் அதைக் கொடுத்திருப்பார்கள். சிலர் நல்ல நிலம் இருந்தும் கெட்ட நிலத்தைக் கொடுத்திருப்பார்கள். அவர்கள் நல்ல நிலத்தைக் கொடுக்க மனம் வராமல் கெட்ட நிலத்தைக் கொடுத்திருக்கலாம். ஆனால் எத்தனையோ பேர்கள் நல்ல மனதோடு நல்ல நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள். முதலாவதாக தன்னிடம் உள்ளதைக் கொடுக்க மனம் வர வேண்டாமா ? தனக்குச் சொந்தமான நிலத்தை தான் தானமாகவே கொடுத்திருப்பதாகச் சொல்வது மகத்தான கருத்தாகும். அதுதான் வினோபாஜீயின் இயக்கத்தின் அடிப்படையான தத்துவம். அஹிம்சா முறையில், சகோதர பாவத்துடன், எல்லோரும் இனிது வாழவேண்டும் என்பதைத்தான் வற்புறுத்தவேண்டும். எங்கும் பாராட்டும் வகையில் இயக்கத்தை வினோபாஜி அவர்கள் இந்த இயக்கத்தை நடத்தி வருகிறார்கள். எல்லோருக்கும் ஒரு புதிய உணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்விதம் நல்லதொரு மனோபாவத்தை உண்டாக்கி நிலம் தானமாக வாங்கி வருவதையும் நிலம் அளிக்கப்படுவதையும் பரிகசிப்பது சரியல்ல. இதில் அடிப்படையாக இருக்கிற கருத்து என்ன என்பதைப்பற்றி நாம் கவனிக்கவேண்டும். அப்படி தானமாக கிடைக்கிற நிலத்தை நிலமில்லாதவர்களுக்கு தானமாக வழங்குவது என்பது சாதாரணமான முறை. இந்த மசோதாவில் இந்த நிலங்களை எல்லாம் நிலமில்லாதவர்களுக்கு கொடுக்கவேண்டிய முறைகளைத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. சில நிலங்கள் சேர்ந்த நிலங்களாக இருந்தால் அதற்கென்று இருக்கக்கூடிய போர்ட் இதைவைத்து சேர்ந்தாற்போல் விவசாயம் செய்யலாம். குத்தகைக்கு விடுவது தவறு என்று சொல்லப்பட்டது ; தனித்தனியாக கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. ஆனால் சில இடங்களில் கூட்டுப் பண்ணை வகையில் விவசாயம் செய்யவேண்டியிருக்கிறது. நிலங்களை சேர்ந்தாற்போல் கொடுக்கும்போது இவ்விதம் கலக்டீவ் பார்மில் விவசாயம் செய்வதை தவிர வேறு வழிகள் ஒன்றும் காணவில்லை. ஏன் இந்த கலக்டீவ் பார்ம்-முறையை ஆட்சேபிக்கின்றார்கள் என்று தெரியவில்லை. பூதானத்தை ஆட்சேபிக்கின்றவர்கள்கூட சமீபத்தில் கேரளத்திற்கு பூதான தலைவர் சென்றபோது அங்குள்ள முதலமைச்சர் அவர்கள் வரவேற்றார்கள் என்று ஸ்ரீ தீட்சதர் அவர்கள் சொன்னார்கள். அது வேறு விஷயம். இவர்கள் காரியம் என்னவென்றால் இந்த அரசாங்கம் ஒரு மசோதாவை கொண்டுவந்திருக்கிறது. அதை ஏதாவது சொல்லி எதிர்க்க வேண்டும், அவ்வளவுதான். நாங்கள் இதற்காக ஒன்றும் செய்யாமல் விட்டுவிடப் போவதில்லை. கூடியவரையில் எல்லோருக்கும் நிலம் கிடைப்பதற்கு பாடுபடுவோம். இவ்விதம் பூதானமாக கிடைத்திருக்கும் நிலங்களை கொடுப்பதற்கு வேண்டிய சட்டங்களை கொண்டுவருகிறோம். மேலும் அவசியமான சட்டங்களை கொண்டுவருவோம். சட்டத்தினால் முடியாது பலாத்காரத்தினால்தான் முடியும் என்ற நம்பிக்கை இருந்தால் அது அவர்களுடைய காரியம். இந்த அரசாங்கம் நினைப்பது சட்டத்தினால்தான் முடியும் என்று. அதில்தான் நம்பிக்கையிருக்கிறது. இது ஒரு சிறந்த இயக்கம். நம் நாட்டிலுள்ள மக்களுக்கு ஒரு புதிய உணர்ச்சியை, ஒரு புதிய மனோபாவத்தை வளரும்படி செய்து அதை பயன்படுத்திதான்

இதை நல்ல முறையில் செயலாற்ற முடியும். அதோடு இதை செயல் முறைக்கு கொண்டுவருவதற்காக சட்டம் இயற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதன் காரணமாக இந்த மசோதா இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதுவரையிலும் இதற்காக கடன் கொடுக்கப்படவில்லை என்று சிலர் கூறினார்கள். சட்டபூர்வமாக இந்த முறை வந்தால்தான் கடன் அதிகமாக கொடுப்பதற்கு முடியும். இருந்தாலும் இப்போதும் கொடுக்கப்பட்டு வருகிறது. மதுரை ஜில்லாவில் பல கிராமங்களில் கிராமதானம் ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கிராமங்களுக்கு பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அங்கு விவசாயம் செய்வதற்கு கடன் அளிக்கப்பட்டிருக் கிறது. கனம் அங்கத்தினர் சுப்பையா நாயக்கர் அவர்கள் சொன்னது போல் இதற்கென்று சட்டம் இல்லாவிட்டால் பலவிதமான சங்கடங்கள் ஏற்படுகிறது. இதனால் சில இடைஞ்சல்களும் ஏற்படுகின்றன. ஆகையினால்தான் இந்த மசோதாவை சட்டமாக்குவதற்காக இங்கு கொண்டு வந்திருக்கிறோம். இதில் கனம் அங்கத்தினர் அவர்கள் கொண்டுவந் திருக்கும் திருத்தத்தை நான் எதிர்க்கிறேன். இதில் அவசியமான திருத் தங்களை செலக்ட் கமிட்டியில் வரும்போது செய்யலாம். ஆகவே இந்த மசோதாவை ஒரு ஜாயிண்ட் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : ஸார், கனம் மந்திரி அவர்கள் நான் நிலம் கொடுத்தவர்களை அவமானம் செய்ததாக சொன்னார்கள் . . .

DEPUTY SPEAKER : I want the hon. Member to say whether he wants to withdraw his amendment or press it.

SRI N. K. PALANISAMI : ஸார் நான் மத்தியதர வகுப்பார்கள் ஏராளமாக நிலம் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். நான் சொல்லும்பொழுது இன்றையதினம் பெரிய ராஜாக்களும் பெரிய ஜமீன்தார்களும் கொடுத்திருக்கிற பூமிகள் எல்லாம் ஒன்றும் முளைக்காத பூமியாக இருக்கிறது. அதைத்தான் சொன்னேனே தவிர வேறு ஒன்று மில்லை. பூதானத்தின் மூலம் நம்நாட்டிலுள்ள நிலப்பிரச்னை பூராவும் தீர்ந்துபோகும் என்று நேருகூட சொல்லவில்லை. அதே நேரத்தில் பலாத்காரத்தின் மூலமாகத்தான் நிலங்களை பிரித்துக் கொடுக்க முடியும் என்று நாங்கள், கம்யூனிஸ்டு கட்சி சொல்லவில்லை. சட்டத்தின் மூலம் தான் கொடுக்கவேண்டுமென்றுதான் கம்யூனிஸ்டு கட்சியும் சொல்லு கிறது. அவ்விதமிருக்கும்போது இந்த இயக்கத்தின் மூலமாக ஓரளவு இந்தப் பிரச்னையை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் இதை நாங்கள் ஆதரிக்கிறோம். இதை எல்லோரும் பரிசீலித்து இதில் அவசிய மான மாற்றங்களை செய்ய வேண்டுமென்றுதான் இந்தத் திருத்தத்தை கொண்டுவந்திருக்கிறேன். ஆகவே நான் இந்த திருத்த பிரேரணையை நான் வற்புறுத்துகிறேன்.

DEPUTY SPEAKER : I shall now put the amendment of the hon. Member, Sri N. K. Palanisami to the vote of the House. The question is—

"The Madras Bhoodan Yagna Bill, 1957 (L.A. Bill No. 15 of 1957) be circulated for eliciting public opinion."

The motion was put and lost.

DEPUTY SPEAKER : I shall now put the original motion to the vote of the House. The question is—

"That the concurrence of the Legislative Council be obtained in setting up a Joint Select Committee consisting of 24 Members (16 Members from the Assembly and 8 Members from the Council)

13th November 1957] [Deputy Speaker]

to consider the Madras Bhoodan Yagna Bill, 1957 (L.A. Bill No. 15 of 1957), and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

1. The Hon. Sri M. Bhaktavatsalam.
2. Sri P. G. Karuthiruman.
3. Srimathi Dr. T. S. Soundaram Ramachandran.
4. Sri A. Vedaratnam.
5. ,, A. Senapathi Gounder.
6. ,, S. Lazar.
7. ,, M. P. Periasami.
8. ,, M. William.
9. ,, R. Krishnasami Naidu.
10. ,, T. Manavalan.
11. ,, M. G. Sankar.
12. ,, V. K. Kothandaraman.
13. ,, P. S. Chinnadurai.
14. ,, P. Veerappa Gounder.
15. ,, D. S. Authimoolam.
16. ,, M. Karunanithi."

The motion was put and carried.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again tomorrow at 9 a.m.

The House then adjourned.

IV.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

81. *Notification issued with G.O. Ms. No. 2663, Industries, Labour and Co-operation, dated 9th August 1957, amending rules XV and XII (a) and introducing new rules IIIA and XXVB in the rules framed under the Madras Co-operative Societies Act* **1932**